

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.10.2025) தென்னிந்தியப் படைத் தளபதி லெப்டினெனன்ட் ஜென்ரல் வி.ஸ்ரீஹரி அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம்,பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், General Officer Commanding Colonel என். பிரசன்னா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2025) காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறையில் பணியின் போது வீரமரணமடைந்த மற்றும் பணியின்போது விபத்துகளில் மரணம் அடைந்த காவலர்கள் என மொத்தம் 6 காவலர்களின் குடும்பத்தினர்களுக்கு தமிழ்நாடு அரசின் சம்பளத் தொகுப்பு (Salary Package) திட்டத்தில் State Bank of India மற்றும் Union Bank of India ஆகிய வங்கிகளின் மூலம் தனிநபர் விபத்து காப்பீட்டுத் தொகை மற்றும் தமிழ்நாடு அரசின் கருணைத் தொகை, என மொத்தம் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவர் ஜி. வெங்கடராமன், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமெரிக்காவின் வாஷிங்டனில்

# 12-ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு!

### சென்னையில் அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி!

*சென்னை, அக். 22-*

12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் பொருளாதார உச்சி உலக மாநாடு அமெரிக்காவின் வாஷிங்டன் அருகே மேரி லாண்ட் மாநிலத்தில் கடந்த 3 முதல் 5ம் தேதி வரை நடந் தது. மாநாடு தொடர்பான அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது.

உலகப் பொருளாதார நிறுவனம் மற்றும் சென்னை வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், விஐடி வேந்தர் கோ.விசுவநாதன், கலாநிதி வீராசாமி எம்.பி., தி.மு.க. செய்தித் தொடர்புத் தலைவர், டி.கே.எஸ். இளங்கோவன், மாநாடு ஒருங்கிணைப்பாளர் ராஜாராம் சீனி வாசன், ஐஎப்எஸ் ஓய்வு அதிகாரி மகாலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து வி.ஆர்.எஸ். சம்பத் கூறியது:

மாநாட்டை மேரி லாண்ட் கவர்னர் மாநில இணை தொடங்கி வைத்



தார். தமிழக பொருளாதார வளர்ச்சிக்கும், உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் மாநாடு முக்கிய பங்களிப்பு செய்தது. 20க்கும் அதிகமான நாடுகளில் இருந்து 540 பேர் பங்கேற்றனர். தமிழகத்தில் இருந்து 100 பேர் பங்கேற்றனர். அடுத்த மாநாடு மொரீஷியசில் அடுத்த ஆண்டு நடக்கிறது.

பன்னாட்டு மொழியாகவும், உலக மொழியாகவும், வணிக மொழியாகவும் தமிழை உயர்த்தவும்,ஐ.நா. அலுவல் மொழியாக தமிழை சேர்க்கவும் இந்திய அரசு மற்றும் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும். வெளிநாட்டு விசா மற்றும்

குடியேற்ற சீர்திருத்தங்கள் குறித்து அரசுகளுடன் கலந்துரையாடும் நோக்கத்தில் பன்னாட்டு தமிழர் பாதுகாப்பு மற்றும் வேலைக்குழு உருவாக்க வேண்டும். இதை அயலகத் தமிழர் நல வாரியம் மேற்கொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும், 100 நகரங்களில் உலகத் தமிழர் சமூக பொருளாதார மையம் உருவாக்க தமிழக அரசு ஒத்துழைப்பும், நிதியுதவியும் வழங்க வேண்டும் உட்பட மாநாட்டில் 22 தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

இவ்வாறு அவர் கூறினார்.

### விழா காலத்தை யொட்டி சென்னையிலிருந்து

# 18 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்குப் பயணம்!

### பேருந்தில் மட்டுமே 6 லட்சம் பேர் சென்றனர்!

*சென்னை, அக்.22-*

நாடு முழுவதும் இன்று தீபஒளி கொண்டாடப்படுகிறது. இதற்காக சென்னையில் இருந்து இதுவரை 18 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு திரும்பி உள்ளனர்.

தீபஒளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு பெருமளவில் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால், கடந்த சில நாட்களாக சென்னை நகரின் முக்கிய சாலைகள் மற்றும் போக்குவரத்து நிலையங்கள் மக்கள் கூட்டத்தால் அலைமோதின. குறிப்பாக, அரசு போக்குவரத்து துறை மற்றும் தெற்கு ரயில்வே ஆகியவை மக்கள் நெரிசலை சமாளிக்க சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

இதன் ஒரு பகுதியாக, கடந்த மூன்று நாட்களில் மட்டும் பேருந்து மூலம் 6,15,992 பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர் என்பது அதிகாரப்பூர்வ தகவலாக வெளியாகியுள்ளது. அதிலும் குறிப்பாக, அக்டோபர் 18 ஆம் தேதி மட்டும் 2,56,152 பயணிகள் சென்னையில் இருந்து பேருந்து மூலம் தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணித்துள்ளனர்.



விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணற்றில் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழா காலத்தை முன்னிட்டு நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பொது மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பொன்னுத்தம்பி, செல்வம் ஆகியோர் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2025) காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறையில் பணியிலிருந்த போதுமரணம் அடைந்த காவல் ஆளிநர்களின் குடும்பத்தை சேர்ந்த 110 நபர்களுக்கு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கும், 65 நபர்களுக்கு தகவல் பதிவு உதவியாளர் /வரவேற்பாளர் (Data Entry Assistant / Receptionist) பணியிடத்திற்கும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை, வழங்குவதின் அடையாளமாக 20 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் ஜி. வெங்கடராமன், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தலைமைப் பண்புக்கு முக்கியமானது எது?

# வெறும் அரிதாரத்தால் எதுவும் சாதிக்க முடியாது!

### திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

*சென்னை, அக்.22-*

மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள்மீது தந்தை பெரியாருக்கு அக்கறை உண்டு. தந்தை பெரியார் வெறும் படமல்ல - பாடம், அவரைப் படியுங்கள்! தி.மு.க. என்ற கற்கோட்டை மீது ஓட்டைப் போடலாம் என்று நினைக்கவேண்டாம். வெறும் அரிதாரத்தால் எதையும் சாதிக்க முடியாது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:



**தந்தை பெரியார் சுய சிந்தனையாளர்!**

தனது சிந்தனையை, மக்களது பிறவி பேதம், துன்ப, துயர நிலைகள், மூட நம்பிக்கைகள், பொறுப்பற்ற வாழ்வு நிலை, பெண்ணடிமையைப் போற்றுதல் போன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராக கூர் ஆயுதங்களாக்கி, வாழ்நாள் முழுவதும் பேசியும், எழுதியும், கொள்கைப் பிரச்சாரங்களை பட்டிதொட்டி எங்கும் பலத்த எதிர்ப்புகளிடையே பரப்பியும், விடியல் கொள்கைகளை வெற்றி பெறச் செய்ய எதிர்நீச்சல், அவதூறுகள், அடக்குமுறைகள், கொடுஞ் சிறை வாசங்கள் இவற்றை ஏற்று, இறுதியில் வெற்றி கண்ட ஒரு மகத்தான வெற்றி வீரர்!

**தந்தை பெரியாரின் இலக்கு!**

அவர் கருத்துகளை அவரது காலத்தில் ஏற்காதவர்களும், அவர் உடலால் மறைந்து, உணர்வால் நிலைத்து, அவரது தன்னலமற்ற தொண்டின் விழுமிய பயனாளிகளும் உணர்ந்து, உலகம் முழுவதும் அவரது கொள்கைகளை வரவேற்றுப் பயனடையத் துடிக்கின்றனர்!

மற்ற பல உலக சிந்தனையாளர்களுக்கும், இவருக்கும் ஒரு பெரிய மாறுபாடு என்னவென்றால், மற்றவர்கள் எழுதினார்கள்; பாடினார்கள்; ஆனால், மக்கள் மன்றத்தின் பேதங்களை எதிர்த்து இயக்கம் கண்டு, போராட்டங்களை நடத்தி, சமத்துவம், சமூகநீதி, சம வாய்ப்பு, சம அதிகாரம் கிட்டாத மக்களுக்குப் புதிய உரிமை வாழ்வினை தமது வாழ்நாளிலேயே பெற்றுத் தந்து மகிழ்ந்து, நம் மக்களின் விழிகளை திறந்து வைத்து, பிறகே தமது விழிகளை மூடிக்கொண்டவர்; தனது கொள்கைச் சுடரை ஏந்தி களங்களில் அவர் தொடங்கிய அறிவுப் போரை, அறப்போரை, தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்ல நல்ல இயக்கத்திற்குத் தொண்டர்களையும் உருவாக்கி, அதை ஆயிரங்காலத்துப் பயிராக்கி நிலைக்கும்படி செய்திருக்கிறார்.

மனிதநேயம், மானுட உரிமை - இவற்றையே மய்யப்படுத்தி, தனது தொண்டறத்தைத் துவளாது, தோற்காது செய்து வெற்றி கண்ட தந்தை பெரியார், இளைஞர்களைத்தான் - அப்புது உலகை நிர்மாணிக்கும் பெரும் பணிக்குத் தனது பாசறைக் கருவிகளாக பெரிதும் இளைஞர்கள், மாணவர்களையே நம்பினார்.

"முதியவர் சொல்லும் முதுநெல்லிக் கனியும் முன்னே கசந்து, பின்னே இனிக்கும்" என்ற முதுமொழிக்கொப்ப, இப்போதைய புதிய தலைமுறைகள் - பயன்பெற்று வருகின்றனர் என்றாலும், அவரது இலக்கு முழுமையாக நிறைவேறிடவில்லை.

பல நூற்றாண்டுகள் பழைமை ஆதிக்கம் - இவற்றைப் புரட்டிப் போட்டார் தனது ஆற்றல் வாய்ந்த தொடர் பணிகள் மூலம்!

தனது சுயமரியாதை இயக்கத்தை - தாம் ஏற்கெனவே வகித்த 29 பதவிகளை, ஒரே நாளில், ஒரே தாளில் துறந்து, தூக்கி எறிந்து தொண்டறத்தைத் தொடங்கினார்.

துவளாது களங்கண்டார். விழியால் இனம் கண்டார் உரிமைகளுக்காக சிறைச்சாலை வாசங்கள் அவரது யதார்த்த வாழ்க்கை முறையாக ஆகிவிட்டது! அனுபவத்தில் பழுத்தார்.

மாணவர்கள், இளைஞர்கள், மகளிர் மீதுதான் தந்தை பெரியார் வைத்த நம்பிக்கை!

அது பொய்த்ததில்லை என்றாலும், இளைஞர்கள், மாணவர்களை திசை மாற்றும் பல வேலைகளைச் செய்வதை அவர் அறிந்தே அவர்களை வெறுத்தொதுக்காமல், விழிப்புணர்வை ஏற்படுத்தி, விரக்திக்கு இடம் தராத பிரச்சாரக் களங்கள் மூலம் வெற்றி பெற்றார்.

அவர் ஒரு சமூக விஞ்ஞானி! அதனால், காரண, காரியம் கண்டு, நடைமுறைச் சமூகத்திற்கு அவ்வப்போது எச்சரிக்கை மணியையும் அடித்து, அறிவுரை கூறி, சரியான பாதையை அவர்கள் தேர்வு செயது, என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழ வைத்துள்ளார்.

இளைஞர்களையே பெரிதும் நம்பிய தந்தை பெரியார் என்ற அந்த சமூக விஞ்ஞானி அவர்களை எப்படிச் சரியான பார்வையோடு பார்த்துச் செதுக்க முக்கிய அறிவுரை கூறுகிறார் பாருங்கள்.

"இளைஞர்கள், குழந்தைகளுக்குச் சமமானவர்கள். பின் விளைவுகளை அனுபவித்து அறியாதவர்கள். கண்ணோட்டம் விழுந்தால், பற்றி விடுபவர்கள்.

எழுச்சி என்பது எங்கெங்கு காணப்படுகின்றனவோ, கூட்டம் குதூகலம் எங்கே காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் பற்றுவதும், அவை மறைந்ததும் கைவிட்டுவிடுவதுமான குணமுடையவர்கள்."

**தலைமைப் பண்புக்கு முக்கியமானது எது?**

நீதிக்கட்சி, அதன் ஆட்சி, பெரியார்தம் பேராதரவு - தந்தை பெரியார், திராவிடர் இயக்கம் - ஆச்சாரியாரின் குலக்கல்வியை ஒழித்து, பல்லாயிரம் பள்ளிக்கூடங்களைத் திறந்த பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சி - மனு தர்மத்தை எதிர்த்து சம தர்மத்தை நிலைநாட்டி வரும் அண்ணா, கலைஞர், மு.க.ஸ்டாலின் ஆகியோர் தலைமையில் நடந்துவரும் சமூகநீதி தொடர்ந்து, சமத்துவ, சம வாய்ப்பு ஆகியவற்றிற்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்., ஆரியம் - விளைவுகளை எண்ணி, பொறுப்பிற்கு பக்குவமாகாத நிலையிலேயே, தமது பணம், திரைப்படச் செல்வாக்கே போதுமானது - ஆட்சி, முதலமைச்சர் என்று கனவு கண்டு, ரசிகர் மன்றத்தையே வாக்கு வங்கி என்று தப்புக்கணக்குடன் களமாடுகிற அரசியல், களம், கொள்கை எதுவும் இல்லாமல், எழுதிக் கொடுத்த வசனம் பேசி, அப்பாவி இளைஞர்கள் வேடிக்கைப் பார்க்க வந்த, படித்த, பாமர மக்கள் உள்பட பலரைப் பலி வாங்கிய நிகழ்வுகளுக்குத் தாம் சிறிதும் பொறுப்பேற்காமல், தமிழ்நாடு அரசு, காவல்துறை மீது அழிபழி சுமத்தி, அறியாமையின் உச்சத்தில் உள்ளதை அய்யா அறிவுரையுடன் இணைத்துச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய அருமையான தருணம் இது - அரசியல் களத்தில்!

நல்ல தலைமைக்கு முக்கிய முதல் அடையாளம் - தமது தோழர்கள், தொண்டர்கள் செய்த தவறாயினும் கூட, தானே முன்வந்து, பொறுப்பேற்று, புதிய பாடம் கற்றுப் பொல்லாங்குகளைக் களைந்து, புதிய புத்தியும், உத்தியும்பற்றிச் சிந்தித்து தனது சுயபரிசோதனை மூலம் செய்தல்.

தமிழ்நாட்டில், தி.மு.க. கூட்டணி என்ற கற்கோட்டையில் ஓட்டை ஏதாவது விழாதா? என்ற ஏக்கத்தில் இருந்து, ஏமாற்ற அரசியலினால் நாளும் புதுப்பழி, ஆதாரமில்லாத அவதூறு பிரச்சாரம் செய்து வருபவர்கள், இப்படி ஒருவருக்கு, அவரது குழம்பிய மனநிலையையே தற்போதைய கூட்டணி அழைப்பு என்று போட்டிப் போட்டுக் கொண்டு அரசியல் தூண்டியலைத் தூக்கிக் கொண்டு அலைகின்றனர் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., அ.தி.மு.க. கூட்டணியினர்.

நடிகரின் அரிதாரம் - பெரியார் பட மாலை போன்ற காட்சிகள், வெறும் காட்சிகள்தான் - மீட்சிகளுக்கானவை அல்ல. சாதிக்கலாம் என்பது பகற்கனவே!

சினிமா கவர்ச்சி, பல கோடி ரூபாய் பணம் மூலம், உண்மையான ஜன நாயகனாகவே முடியாது. பிறரிடம் சரண் ஆகாமல், அவரும், அவரது தோழர்களும் புரிந்துகொண்டு, திருத்திக்கொண்டு அரசியல் நடத்த வரவேண்டும். அதற்குரிய பரிபக்குவம் முதலாவது பாலபாடம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (21.10.2025) அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தலைமையில் வடகிழக்கு பருவமழைக்காக செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜானி, , தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் திருமதி சி.ப்ரியங்கா, ஆகியோர் கலந்து கொண்டனர்.